| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>சந்திரசேகரன் | OS.349/2018 | 05.01.2024 |

**PW1– குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் பரிகாரம் கோரிய வழக்கு மொத்த சொத்தின் அளவு 2 ஏக்கர் 29 செண்ட் ஆகும். வழக்கு அ அட்டவணை சொத்து விபரத்தில் மொத்தம் 2 ஏக்கர் 29 செண்ட் என கண்டுள்ளது என்றால் சரிதான். பி அட்டவணை சொத்தில் 1.14–1/2 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். சி அட்டவணை சொத்தில் 1.14–1/2 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மொத்தமாக 4 ஏக்கர் 29 செண்ட்க்கு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து விபரத்தில் உள்ள விபரங்களை எனது வழக்கறிஞரிடம் நான் தான் சொன்னேன். தாவா சொத்துக்களை பொறுத்து அனுபவ உரிமை எதுவும் இல்லாததால் தான் 4 ஏக்கர் 29 செண்ட்டிற்கு தவறாக பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் தவறானது. 4 ஏக்கர் 29 செண்ட்டிற்கு எனக்கு உரிமை அனுபவம் உள்ளதாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. 2 ஏக்கர் 29 செண்டிற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வழக்குரையில் வழக்கு சொத்தை குத்தகை எடுத்ததாக சொல்லப்படும் தேதி, மாதம், வருடம் ஆகியவற்றை குறிப்பிட்டு சொல்லாதததற்கு காரணம் என்னவென்றால் ஆவணம் எதுவும் எழுதப்படாததால் சொல்லவில்லை. குத்தகையே எடுக்கவில்லை என்பதால் தான் தேதி, மாதம், வருடம் ஆகியவற்றை என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து வாய்மொழி குத்தகை ஏற்படவில்லை என்றும் வழக்கிற்காக வாய்மொழி குத்தகை ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புல எண்.99/8 சம்மந்தமாக பழனிசாமி, உயிருடன்

இருந்தகாலத்திலோ அல்லது பிரதிவாதியிடமோ குத்தகை எதுவும் ஏற்படுத்திக் கொண்டேனா என்றால் பிரதிவாதியிடம் ஏற்படுத்தவில்லை. பழனிசாமியிடம் குத்தகை ஏற்படுத்தி கொண்டேன். பழனிசாமியிடம் குத்தகை ஏற்படுத்தி கொண்டதற்கான தேதி மாதம் வருடம் சொல்லாததற்கான காரணம் என்னவென்றால் ஆவணம் எதுவும் ஏற்படுத்ததால் சொல்லவில்லை. நான் பழனிசாமியிடமோ, முத்துவேலுவிடமோ குத்தகை எதுவும் ஏற்படுத்தி கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் பக்கம் எண்.2, 5 ம் தாளில் எனது தந்தையார் பெரியசாமி உயிருடன் இருக்கும் போதே குடும்பத்தில் இதர உறுப்பினர்களின் சம்மதத்தின் பேரிலும் என வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம் ஏற்படும் போது பழனிசாமி உயிருடன் இருந்தார். வா.சா.ஆ.6 ஏற்படும் போது இதர உறுப்பினர்கள் என்ற பன்மையை பொறுத்த பெரியசாமியின் வாரிசுகள் யார் யார் உள்ளனர் என்று முத்துவேலிடம் கேட்கவில்லை என்றால் முத்துவேலிடம் கேட்டேன் நாங்கள் இருவர் தான் வாரிசு என முத்துவேல் சொன்னார். தனிப்பட்ட முறையில் பெரியசாமியின் வாரிசுகள் யார் என விசாரித்து தெரிந்துகொள்ள நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் விசாரித்த வகையில் இருவர் தான் வாரிசு என தெரிந்து கொண்டேன். பரமேஸ்வரி வாரிசாக உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றும் முத்துவேலுக்கு ஆதரவாக ஆவணம் ஏற்படுத்தவேண்டும் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக ஒருவருக்கு கிரையம் ஏற்பட்ட சொத்தில் அவரது தகப்பனாருக்கு உரிமை வராது என்றால் உயிருடன் இருக்கும் வரை உரிமை வரும். பெரியசாமி உயிருடன் இருந்த வரை முத்துவேல், பழனிசாமி ஆகிய இருவருக்கும்

சொத்துக்களில் உரிமை உள்ளதாக நான் சொல்கிறேன் என்றால் சரிதான். ஒரு ஆவணம் பதிவு செய்யப்படும் போது அதற்கான மூல ஆதரவுகளை வைத்துக்கொண்டு தான் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். இந்த நீதிமன்றதில் நான் சாட்சியம் அளித்ததற்கு பின்னிட்டாவது வா.சா.ஆ.6 ல் கண்ட பதிவாகாத உயில் சாசனத்தை முத்துவேலிடம் கேட்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் 2012 ற்கு பின்னிட்டு கேட்டேன் அவர் இல்லை என்று சொன்னார். எழுத்துமூலமாக முத்துவேலிடம் நான் கோரிக்கை எதுவும் வைக்கவில்லை. நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்ததற்கு பின்னிட்டு முத்துவேலிடம் கேட்டேன். அவர் இல்லை என்று கூறினார். 2012 பத்திரம் ஏற்பட்டதேதியில் வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சொல்வது போல் உயில் ஆவணம் எதுவும் இல்லை என்றும், நானும், முத்துவேலும் செல்வாக்கை பயன்படுத்தை வா.சா.ஆ.6 ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் நல்ல எண்ணத்தில் ஏற்பட்ட கிரையதாரராக இல்லாததால் தான் உயில் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தில் 05.10.2012 அன்று எனக்கு பதிலாக தாங்களே கொடுத்து புதூர்உத்தமனூர் கிராமத்தில் வசிக்கும் சுப்ரமணிய குமாரர் சுகுமார் என்பவருக்கு சாட்டுதல் செய்த வகையில் பற்றானது ரூ.1,70,000/– என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான் என்றால் ரூ,1,70,000/– பற்றானது என்பது தவறானதாகும். ரூ.88,000/– தான் பற்றானது. ரூ.1,70,000/– தவறாக போட்டுள்ளதாக நான் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் ஆட்சேபனை செய்தேன். அதற்கு விளக்கம் கேட்ட போது முத்துவேல் வாங்கிய ரூ,82,000/–ற்கும் சுகுமாருக்கு

சாட்டுதல் செய்த வகையில் ரூ.88,000/- என மொத்தம் ரூ.1,70,000/- ற்கு பற்றானது என சாட்சியமளிக்கிறார். 05.07.2012ம் தேதியன்று சுகுமார் அவர்களுக்கு தச்சங்குறிச்சி கிராமம் சர்வே எண்.389/10 உள்ள நிலத்தை பொறுத்து ஜாமீனாக காட்டி உள்ள வில்லங்கத்தை தவிர வேறு முன் வில்லங்க விவகாரம் இல்லை என வாசகம் கண்டுள்ளது என்றால் சரிதான். பரமேஸ்வரி தனக்கும் உரிமை உள்ளது என கட்சி செய்வதாக முத்துவேலுவிடம் நான் கேட்டேனா என்றால் கேட்டேன் அதற்கு முத்துவேல் தவறு என்று சொன்னார். எனது ஆட்சேபனை மீறி ரூ,1,70,000/- பற்றானது குறித்து சார்பதிவாளரிடம் தெரிவித்தேனா என்றால் முத்துவேல் அதற்கு விளக்கம் சொன்னதால் சார்பதிவாளரிடம் சொல்லவில்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் கண்டுள்ளவாறு சுவாதீன பரிமாற்றமும், தொகை பரிமாற்றமும் ஏற்படவில்லை என்றும், அதனால் தான் என்னால் நிர்ணயமான தொகையை சொல்ல இயலவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்து வாரிசுரிமை சட்டப்படி பெரியசாமியின் வாரிசு பரமேஸ்வரிக்கு சொத்து சென்றுவிடக்கூடாது என்பதற்காக நானும், முத்துவேலும் சட்டவிரோதமாக வா.சா.ஆ.6 ஆவணத்தை தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ல் கண்டுள்ள வாசகங்களின் படி நானும் முத்துவேலும் வழக்குரை சொத்துக்களை பெரியசாமியின் பொது குடும்ப சொத்து என ஒப்புக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. சுகுமார் யார் என்றே எனக்கு தெரியாது என்றம் அவரிடம் நான் நேரடியாக பணம் கொடுக்கவில்லை என்று சொன்னால் முத்துவேல் ஒரு நாள் அழைத்து சென்று சுகுமாரிடம் சாட்டுதல் செய்தார். சுகுமார் புதூர்உத்தமனூர் ஊராட்சி மன்ற தலைவராக உள்ளார். வா.சா.ஆ.6 படி நான் தாவா சொத்துக்களுக்கு குத்தகைதாரரரோ,

உரிமைதாரரோ கிடையாது என்றால் சரியல்ல. வழக்குரையில் காட்டியுள்ள வருவாய் ஆவணங்கள் முத்துவேல் தவறான ஆதாயம் அடையவேண்டும் என்பதற்காக உற்பத்தி செய்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.12 வருவாய் ஆவணம் சம்மந்தமாக பிரதிவாதிக்கு அறிவிப்பு எதுவும் சென்றாதா என்று எனக்கு தெரியாது. குத்தகை பதிவேட்டில் என்னை குத்ததகைதாரராக பதிவு செய்ய நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. குத்தகைக்கு ரசீது கொடுத்த விபரம் குறித்து முத்துவேலுவை விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. முத்துவேலுவை விசாரிக்க நான் நடவடிக்கை எடுக்கஉள்ளேன். வா.சா.ஆ.14 ல் உள்ள விபரங்கள் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் 100/1 ல் நிலம் என்று தான் கண்டுள்ளது என்றும், தென்னை மற்றும் மா என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணத்தில் 100/1 ல் தென்னை மற்றும் மா என உள்ளது என்றால் அடங்கலில் உள்ளது ஆவணத்தில் அவ்வாறு இல்லை. 101/7C யை பொறுத்து தரிசு என கண்டுள்ளது என்றால் அடங்கலில் அவ்வாறு தான் உள்ளது. தாவா சொத்தில் அனுபவம் இல்லாததால் தான் தென்னை, மா எங்கு உள்ளது என்று ஆவணத்திலும் வழக்குரையிலும குறிப்பிட்ட புல எண்ணிற்கு நேராக எழுதவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 புல எண்.102/2 ற்கு நேராக நெல்லோ, தரிசோ, மா என்று குறிப்பு எதுவும் இல்லாமல் காலியாக உள்ளது என்றால் சரிதான். நான் செல்வாக்கை பயன்படுத்தி வா.சா.ஆ.14 ஆவணத்தை பெற்றதால் தான் அதில் குறிப்பு எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.14 ல் நிறைய இடங்கள் வெற்றிடமாக தான் கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா நிலத்தில் போர்வெல் எப்போது போட்டார்கள் என்றால் அது போர்வெல்

இல்லை கிணறு ஆகும். கிணற்றிற்கு மின்சார மோட்டார் இணைப்பு எப்போது யார் பெயரில் வாங்கினார்கள் என்றால் அது பற்றி முத்துவேல் எனக்கு தகவல் எதுவும் சொல்லவில்லை. நான் வழக்கிற்கு முன்போ, அல்லது பின்னிட்டோ மேற்படி சங்கதி குறித்து தெரிந்து கொள்ள நான் நடடிவக்கை எடுக்கவில்லை. தாவா நிலங்களில் அக்கறை, நலன், அனுபோகம் எதுவும் இல்லததால் தான் அது குறித்து தெரிந்துகொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்திலும், வழக்குரையிலும் கண்டுள்ள விநாயகர் மின்சார மோட்டார் பம்செட் சம்மந்தமான ஆவணம் உள்ளது என்றால் முத்துவேல் என்னிடம் கொடுக்கவில்லை. விநாயகர் மின்சார மோட்டார் பம்ப்செட் என்று எதுவும் இல்லை என்பதால் தான் திட்டமிட்டு வா.சா.ஆ.6 ஆவணத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக அது சம்மந்தமான ஆதரவுகள் எதுவும் இல்லாமல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மின்சார மோட்டார் இணைப்பு ஏற்பட்ட பிறகு கூட்டுறவு நீர்பாசன சங்கத்தின் ஆதரவு எதுவும் தாவா நிலத்திற்கு தேவையில்லை என தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவண காலத்தில் கூட்டுறவு நீர்பாசன சங்கத்தின் ஆதரவு தேவையில்லை என்றும், மின்சார மோட்டார் பம்ப்செட் குறிப்பிட்டுள்ளது குறித்து ஆட்பேனை செய்துள்ளேனா என்றால் பொதுவாக எல்லா நிலத்து காரர்களும் சேர்ந்து செய்தது என்பதால் பாதிப்பு இல்லை என்று முத்துவேல் சொன்னார். வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு 15 வருடங்களுக்கு முன்பே மின்சார மோட்டார் இணைப்பு ஏற்பட்டுவிட்டது என்றும், முத்துவேலுக்கு தாவா நிலங்களை பொறுத்து அனுபவ உரிமை இல்லாததால் தான் அவரால் வா.சா.ஆ.6 ல் சரியான தகவல்கள் சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. தாவா நிலங்களை பொறுத்து எதுவும் தெரிந்துகொள்ளாமல்

மின்சார இணைப்பு உள்ள கிணறு பகுதிக்கு கூட்டுறவு நீர்பாசன சங்கம் மூலம் நீர்பாய்ச்சுவதாக பொய்யாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிய்லல. பிரதிவாதி பரமேஸ்வரியை தற்போது தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ள வழக்குமூலம் பொய்யானது என்றும், எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.